மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடஆற்காடு, செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட ஊட்டசத்து அலுவலர் பதவி நிரப்பப்படாமல் காலியாக இருந்தது.

(ஆ) நிரப்பப்படாமல் காலியாக இருந்த மேற்படி பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ள போதிலும், இத்திட்டத்தின் பணிகளின் முக்கியத்துவம் கருதி, இப்பதவிகள் துறையில் உள்ள அலுவலர்களைக் கொண்டு கூடுதல் பொறுப்பு அளித்து தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

604—(*வினா எண் 12069) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் 1987 ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—3—1987-ல் முடிவடைய இருந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தை 31—3—1988 வரை நீட்டித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் பஞ்சாயத்து யூனியன் முடிகொண்டான் ஆற்றில் படுகை அணை.

605—(*வினா எண் 7971) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் வாய்க்கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் ஒரு படுகை அணை கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

1987 மே 5]

*திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அதம்பார் வாய்க்காலின் மூலம், குப்பம், சோத்திரியம், மணியாங்குடி, மேலவெளி, ஒத்தைமேடு பல்லவநத்தம், படுகை, வாழ்க்கை போன்ற கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார், மூவாயிரம் ஏக்க ருக்கு மேற்பட்ட நிலங்கள் பாசன வசதி பெற்றிருக்கின்றன. ஆகவே, அதைக் கருத்திற்கொண்டு இந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த பெட் டேமைக் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்று இலட்சம் ரூபாயிலே அந்த பெட் டேம் கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளது. காவேரி டெல்டா சீரமைப்புத் திட்டத்திலே அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதிலே காலதாமதம் ஆகும் என்று சொன்னால், அரசினுடைய நிதியிலிருந்து செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே 1924 ஆம் ஆண்டு காவேரி ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளாததன் விளைவாக இன்றையதினம் காவேரியிலே வருகின்ற தண்ணீரின் அளவு மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே ஆறுகளிலே வருகின்ற தண்ணீர் ஹெல்ட் அப் ஆகி வாய்க்காலிலே பாய்வ தில்லை. எனவே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற அந்தக் காவேரியிலே இருக்கின்ற வாய்க்கால்களில் எந்தெந்தப் பகுதி களுக்கு ரெகுலேட்டர் தேவை என்று ஆய்வு செய்து, அந்தந்தப் பகுதி கூறிலே இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அல்லது உலக வங்கித் திட்டத்தின் மூலமாகவோ பெட் டேம் கட்டி, பாச னத்திற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புவ தோடு: தண்ணீர் பூராவும் போய் கடலிலே சேருவதால், அதைக் கருத்திற்கொண்டு காவேரியிலே ஒவ்வொரு ஏரியாவிலேயும் எந்த இடத்திற்குத் தேவை என்று ஆய்வு செய்து, உலக வங்கித் திட்டத்தின் மூலமாக அல்லது நான்கைந்து ஆண்டுக் காலத்திற் குள்ளாக எல்லாயிடங்களிலும் ரெகுலேட்டர் கட்டினால்தான்

வாய்க்காலிலே ஹெல்ட் அப் ஆகி தண்ணீர் பாயும். இதைக் கருத்திற்கொண்டு அமைச்சரவர்கள் ஒரு திட்டத்தைத் தயாரிக்க வழி வகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, காவேரி டெல்டா சீரமைப்புத் திட்டம் என்பதே அப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்வதுதான். வருகின்ற தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி தேவைப்பட்ட இடத்திற்கு மிக வேகமாகத் தண்ணீரைக் கொடுப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய வடிவமைப்பு. அவர் சொல்வதைப்போல காவேரி பகுதி பூரா செய்ய வேண்டுமென்று சொன்னால் அதிகச் செலவு ஆகும். ஆகவே தான் உலக வங்கி உதவியோடு அப்படிப்பட்ட முயற்சிகளை இன்றைக்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

கொடை ரோடு அருகில் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம்.

606—(*வினா எண் 13569) **திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியத்தில் கொடை ரோடு அருகில் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எப்படியும் இந்தப் பணியைத் தொடங்குவதற்கு உத்தரவு வழங்குவார்கள் என்ற எண்ணத்தில்தான் இந்த வினாவை எழுப்பினேன். ஆகையால் இந்தத் திட்டத்திற்கு முதலிலே எஸ்டிமேட், பிறகு ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டு இப்பொழுது அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தப் பகுதியின் வறட்சி நிலையை அறிந்து இந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்றுவதற்கு உத்தரவு வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.